Before the Court of Chief Judicial Magistrate Cum Special judge Kanyakumari

**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 173 BNSS)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348001

1. District மாவட்டம் : Kanyakumari PS: காவல்நிலையம் : V2AC Kanyakumari Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 01/2025 Date: நாள் 01.04.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27.03.2025 and 01.04.2025
   Date from : நாள் முதல் at 11.30hrs Date to : நாள் வரை at 12.00hrs

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.04.2025 Time நேரம் : 16.00hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral / Electronic form : Oral.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் கிராம நிர்வாக அலுவலகம், தலக்குளம் கிராமம் சுமார், 12 கிமீ மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. ஆறுமுகம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண். 3-17 F, சடவிளை, புதுவிளை, நெய்யூர் (Po) தலக்குளம் கிராமம், கன்னியாகுமரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. அமலா ராணி, கிராம நிர்வாக அலுவலர், தலக்குளம் கிராமம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed C. Sivasankari... Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. ஆறுமுகம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 01.04.2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01.04.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 19.15 hrs.

Name: பெயர் T.T. ரமா,
Rank: நிலை காவல் ஆய்வாளர்
ஊ.த.க பிரிவு
கன்னியாகுமரி

**Attachment to column No.12 of First Information Report in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No-01/2025**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:- இன்று 01.04.2025-ம் தேதி மாலை 04.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் T.T.ரெமா ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது, கன்னியாகுமரி மாவட்டம் தலக்குளம் கிராமம், நெய்யூர் அஞ்சல், புதுவிளை, சடவிளை, எண்.3-17 சி என்ற முகவரியில் வசித்து வரும் கணபதி நாடார் மகன் ஆறுமுகம் என்பவர் என் முன்பு ஆஜராகி வாய்மொழியாக ஒரு புகார் மனுவை கூறினார். நான் அவர் கூறிய புகாரை வாக்குமூலமாக பதிவு செய்து எதிரி மற்றும் புகார்தாரர் ஆகியோரது முன்நடத்தைகள் குறித்து என்னுடைய ரகசிய தொடர்பாளர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படி புகார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து, வாய்மொழி உத்தரவு பெற்று கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2025 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 –ஆக இன்று 01.04.2025 ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு. திரு.G.ஆறுமுகம், வயது 56, த/பெ. கணபதிநாடார், எண்.3-17 சி, சடவிளை, புதுவிளை, நெய்யூர் (PO), தலக்குளம் கிராமம், கல்குளம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்பவர் இன்று 01.04.2025 மாலை 16.00 மணிக்கு என் முன்பாக ஆஜராகி சொன்ன புகார் விபரம் பின்வருமாறு: நான் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, தலக்குளம் கிராமம், சடவிளை, புதுவிளையில் கதவு எண்.3-17சி என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 6-வது வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு சரியாக எழுதத்தெரியாது ஆனால் படிக்க தெரியும். நான் பேரூராட்சிகளில் ஒப்பந்த அடிப்படையில் மன்றத்தால் கொடுக்கப்படும் வேலைகளை ஒப்பந்ததாரராக இருந்து செய்து வருகிறேன். தற்போது எனக்கு அரசுவேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்ய சால்வன்சி சான்று தேவைப்படுவதால் சால்வன்சி சான்று கேட்டு சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் 19.03.2025 அன்று திங்கள்நகரில் உள்ள தலக்குளம் கூட்டுறவு வங்கியுடன் சேர்ந்துள்ள ஈ-சேவை மையம் மூலம் ரூபாய் 60 செலுத்தி விண்ணப்பித்திருந்தேன். அதற்கு ஒப்புகைசீட்டும் தந்தார்கள். அன்று மாலை சுமார் 4.00 மணிக்கு தலக்குளம் கிராம நிர்வாக அலுவலர் எனது அலைபேசியில் தொடர்பு கொண்டு எனது மனு சம்பந்தமாக இடத்தை பார்க்க வேண்டும் என்று சொன்னதால் நான் ஒரு ஆட்டோவில் கிராம நிர்வாக அலுவலரை அழைத்து வந்து எனது இடத்தை காண்பித்தேன். இடத்தை பார்த்துவிட்டு சால்வன்சி உடனே வாங்கி தருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார். ஆனால் அதன்பிறகு எந்த நடவடிக்கையும் இல்லாததால் நான் 27.03.2025 அன்று காலை 11.30 மணிக்கு ஏற்கனவே எனது வீட்டுக்கு வந்து இடத்தை பார்த்து

சென்ற தலக்குளம் கிராம நிர்வாக அலுவலரான திருமதி.அமலா ராணி என்பவரை அவரது அலுவலகத்துக்கு சென்று பார்த்து எனது சால்வன்சி சான்று பற்றி கேட்டபோது அதற்கு ரூபாய் செலவாகும் என்றும் உங்களுக்கு சால்வன்சி சான்று பெற நான் ஏற்பாடு செய்து தருகிறேன் என்றும் அதற்கு ரூ.4000/-ம் லஞ்சமாக தரவேண்டும் என்றும் கேட்டார். அப்போது நான் என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டுக்கு வந்துவிட்டேன். மீண்டும் இன்று 01.04.2025 மதியம் சுமார் 12.00 மணியளவில் நான் தலக்குளம் வி.ஏ.ஓ அலுவலகத்துக்கு சென்று வி.ஏ.ஓ திருமதி.அமலா ராணி என்பவரை பார்த்து என் பெயரில் உள்ள சால்வன்சி சான்று பற்றி கேட்டபோது அவர் தான் கேட்ட ரூபாய் 4000/- கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் சால்வன்சிக்கு செலான் கட்ட பணம் ரெடி பண்ண வேண்டியுள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படியானால் ரூபாய் ஆயிரத்தை குறைத்து ரூ.3000/-ம் எனக்கு தந்தால் தான் உங்களுக்கு சால்வன்சி வாங்கி தர ஏற்பாடு செய்வேன் என்றும், நாளைக்கு நான் கேட்ட பணத்துடன் வாருங்கள் என்றும் கூறினார். எனக்கு லஞ்சம் கொடுத்து சால்வன்சி சான்று வாங்க விருப்பம் இல்லாததால் தலக்குளம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.அமலா ராணி லஞ்சமாக கேட்ட ரூ.3,000/-த்தை எனது சொந்த செலவுக்காக வைத்திருந்த பணத்திலிருந்து எடுத்துக்கொண்டு வந்துள்ளேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட தலக்குளம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.அமலா ராணி என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் இ-சேவை மையத்தில் சால்வன்சி சான்று கேட்டு விண்ணப்பித்தபோது வழங்கப்பட்ட ஒப்புகை சீட்டின் நகலை தங்களிடம் ஒப்படைக்கிறேன். நான் இந்த வாய்மொழி புகார் வாக்கு மூலத்தினை தங்களிடம் சொல்ல சொல்ல, அதனை தாங்கள் கணினியில் தட்டச்சு செய்து அதை பிரிண்ட் எடுத்து என்னிடம் தந்ததை நான் படித்தும் பார்த்தேன். அதில் நான் சென்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு G.ஆறுமுகம் 1/4/2025. Sir Received the complaint on 01/04/2025 at 16.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and the antecedents of the accused was also verified through sources and found bad. Found Prima facie for the allegation of the complainant. Since the registration of Regular Case is warranted. The matter is intimated to the SP/SR DVAC Chennai and registered a case in Kanyakumari V & AC Cr.No-01/2025 u/s 7 of Prevention of Corruption act 1988 (as amended in 2018) on 01.04.2025 at 18.00 hrs and took up for investigation. sd.01/04/2025 Ins T.T.Rema, Inspector of Police, V & AC, Kanyakumari.

இந்த அசல் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் மனு மற்றும் ஒப்புகை சீட்டு நகல் ஆகியவற்றுடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி கன்னியாகுமரி

மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

Remani
01/04/2025
[T. REMA]
Inspector of Police,
V&AC
Kanyakumari